www.tamilarangam.net

# மாவீரர் நாள்

# 1999

நவம்பர் 27



# சூரியப் புதல்வர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எம் தேசத்தின் சூரியப்புதல்வர்கள்



மனித வரலாறு அமைதியானதாக ஒருபோதும் இருந்ததில்லை. ஆக்கிரமிப்புகளும், இன அழிப்புகளும் அவற்றிற்கெதிரான போருமாக தொடர்ந்த வண்ணமுள்ளது. ஐந்து நூற்றாண்டுகளாக அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்தும், இன அழிவிலிருந்தும் எம்மை பாதுகாக்க இன்று நாம் போராடவேண்டியுள்ளது. இந்த வீர சுதந்திரப் போராட்ட வரலாறு வெறும் உணர்வுகளால் மட்டும் பதியபடவில்லை. இது மாவீரர்களின் அளப்பரிய தியாகங்களாலும் உயிர்க் கொடைகளாலும் பதியப்பட்டுவருகின்றது. எம் மண் விடிவிற்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் எதிரியிடமிருந்து எம்மை விடுவிக்க தம்மை எமக்காக அர்ப்பணித்தவர்கள். வெறும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை இவர்களின் தியாகங்கள். இவற்றை நாமும் நமது தலைமுறைகளும் மறந்துபோவோமாயின் மீண்டும் அடிமை இருளுக்குள் தள்ளப்படுவோம்.

உலகிற்கு ஒளி வழங்கும் சூரியன் போல், ஈழத்தமிழினத்திற்கு சுதந்திர ஒளியை பெற்றுத்தந்தவர்கள். இவர்களின் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் வெறும் நினைவுகளாக எம்முள் மட்டும் வாழவைக்காது இனிவரும் சந்ததிகளையும் பாதுகாக்கவும், அவர்தம் நினைவில் நிற்கவும் வைப்பதுமே நாம் இவர்கள் சுமந்த இலட்சியத்தை நிறைவு செய்யும் கடன். இவர்கள் நினைவும் செயலும் நம்முள் நிறைந்திருக்க நிதமும் இவர் பெயர் உச்சரிப்போம்.

ஆம் மாவீரர்கள் எம் தேசத்தின் சூரியப்புதல்வர்கள்.

புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்

அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நடுகல்



கார்த்திகைத் திங்கள் கடும் குளிர்வாடை
வீசும் காலம் மாசில் ஒருநாள்
பண்டைத் தோன்றிய தண்டமிழ் மரபின்
மாலை இட்டு மலர்கள் தூவி
நெய்விளக்கேற்றி பெய்ம் மழை அன்ன
விழிநீர் ஒழுக பலர் நின்று தொழுஉம்
இவையே
ஞாலம் வியக்கத் தாயகம் மீட்கப்
பாசறை கலங்கள். பகையொரு வளங்கள்
என்றிவை சிதைய என்றிய சினத்தில்
வெடியொடு சென்று வெடித்து வீழ்ந்தும்
அறத்தர்நாம் என்றவர் முகத்திரை கிழிய
மென்முறை வழியில் உண்ணாது நோற்றுத்
தம்முயிர் ஈந்தும் செம்மையில் தெய்வர்
கையகப்படாது மரபது காக்க
நஞ்சினை உண்டு நல்லுயிர் விட்டும்
வெஞ்சமர் ஆடிக் களத்திடை வீழ்ந்தும்
மாண்ட கரும்புலி மறவர் பெயரும்
ஈண்டவர் ஈட்டிய பெருமையும் அன்னார்
வாழும் ஊரும் வீழ்ந்த
நாளும் எழுதிய நடுகல் தாமே.

- பண்டிதர் வீ.பரந்தாமன்

www.tamilarangam.net

# “மாவீரர்களே எமது மண்ணின் காப்பரண்கள் எமது மக்களின் காவற்தெய்வங்கள்”

நீண்ட காலமாகவே தமிழர் தேசம் விடுதலைக்காகப் போராடி வருகிறது. ஒரு சிறிய தேசமாக இருந்த போதும் விடுதலைக்காக நாம் கொடுத்துவரும் விலை மிகப்பெரியது. அடக்குமுறைக்கு அடிபணிந்து அடிமைகளாக வாழ்வதைவிட விடுதலைக்காக எத்தகைய விலையையும் கொடுக்க எமது தேசம் தயாராக இருக்கிறது. இதனால்தான் நாம் அதிகளவில் இரத்தம் சிந்தியும், அளப்பரிய உயிர்விலை கொடுத்தும், உறுதி தளராது போராடி வருகிறோம். அணையாத நெருப்பாகச் சுவாலை விட்டெரியும் எமது வீர விடுதலைப் போரில் நாம் புரிந்து வரும் அதியுயர் தியாகங்களும் அற்புதமான அர்ப்பணிப்புக்களும் இன்று முழு உலகத்தையுமே வியப்பில் ஆழ்த்தியுள்ளன. இந்த வீர விடுதலை வரலாற்றின் கதாநாயகர்களாகத் திகழ்பவர்கள் எமது மாவீரர்களே.



எமது தேசத்தின் விடுதலைக்காக தம்முயிரை அர்ப்பணித்த ஒவ்வொரு சுதந்திரப் போராளிக்கும் எமது தேசத்தின் வரலாற்றில் அழியாத இடமுண்டு. இவர்கள் சாதாரணர்களாகச் சாவைத் தழுவவில்லை. எமது* இனத்தின் இருப்பிற்காக, இவர்கள் தமது சுயத்தை அழித்தவர்கள். இந்த அற்புதமான துறவறத்தால் இவர்களது அடையாளங்கள் என்றுமே அழிவதில்லை. இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனிமனித சரித்திரம். ஆயிரமாயிரம் மாவீரர்களின், ஆயிரமாயிரம் தனிமனித சரித்திரங்கள் சங்கமாகிய பெருநதியாகவே எமது தேசத்தின் வரலாறு வீறுகொண்டு ஓடுகிறது.



எமது இனத்தை அழிக்க வந்த இனவாத இராணுவம் தன்னழிவையே சந்தித்து நிற்கிறது. வன்னிச் சமர்க் களங்களில் ஆயிரமாயிரமாக ஆக்கிரமிப்பாளர்கள் அழிக்கப் பட்டு வருகிறார்கள். தமிழீழம் எதிரிப்படைகளின் மயான பூமியாக மாறிவருகிறது. எமது பாசறைகளிருந்து படரும் சுதந்திர நெருப்பை எதிர்கொள்ள முடியாது எதிரி இராணுவம் திணறுகிறது. விடுதலைப் போரில் இந்தத் திருப்பத்தை ஏற்படுத்தித்தந்தவர்கள் எமது மாவீரர்கள் என்பதை நான் பெருமையுடன் கூறுவேன். எமது மாவீரர்கள் சிந்திய ஒவ்வொரு துளி இரத்தமும் அர்த்தமுள்ளதாக, எமது தேசத்தின் விடுதலைப் பாதைக்கு ஆதாரமானதாக அமைகிறது. அவர்களது ஒப்பற்ற உயிர்த்தியாகமே எமது மக்களை பாரிய இன அழிவிலிருந்து பாதுகாத்து வருகிறது. மாவீரர்களே எமது மண்ணின் காப்பரண்கள். எமது மக்களின் காவற்தெய்வங்கள்.

1998ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உள**ண் மறந்து
உயிர் மறந்து
நெஞ்சின்
புயலோடும்
வயிற்றின்
நெருப்போடும்
நீங்கள்
சிற்றூர் வாயில்
நுழைந்த
மாலைக்கருக்கலில்
சோற்றுப்பொட்டலத்தோடு
உங்கள் வருகைக்காய்
காத்திருந்த
காளியம்மன் கோயிலடி
அன்னம்மாக்கா.....

போரின்
காயங்கள்
தாங்கி
எதிரிகைள
உரித்துவைத்த
கண்ணாடிவிரியனும்
நாகமும்
காடும் மிதித்து
நீங்கள்
ஓடிவந்த
நெருப்பாற்று வழியில்
மூலிகைப்பெட்டியும்
கையுமாய்
உங்களைச் சந்தித்த
வேப்பங் குளக்கரை
"பரியாரி"
கந்தப்பர்.....

போரில்
கைப்பற்றி
தேங்காய்க்கும்பமாய்
நீங்கள் குவித்த
எதிரியின்
படைக்கருவிகளை
காலத்தாழ்வின்றி
அப்புறப்படுத்த
புயல் விரைவில்
நீங்கள்
விழைந்தவேளை
தோளில்
அவை சுமக்க
காசநோய் மறந்து
நூலாய் இழுபடும்
மூச்சோடு
ஓடிவந்த
கிழக்கு வட்டை
வேலாப்போடி....

## காசி ஆனந்தன்

அடர்ந்த புதரில்
கரைந்துறையும்
புலிகளாய்
எங்கள்
சிற்றூரில்
மறைந்திருந்த
உங்கள்
இன்னுயிர் பறிக்க
எதிரிகள் படை
ஊரெல்லை தாண்டிய
நச்சிரவில்
முன்னெச்சரிக்கை
முழக்காய்
ஓங்கிக் "குலைத்து"
உங்களை உசுப்பிய
எங்கள் வீட்டு
வளைசெவியன்.....

எதிரியை
மறைந்திருந்து தாக்க
நீங்கள்
இடம் தேடியபோது
மதில்போல் தடித்த
அடிப்புறம்
தந்து
உங்களைக் காத்த
பச்சைவிரித்த
எங்களூர்
முச்சந்தி

நெட்டாலமரம்.....

ஓ! மாவீரர்களே!
விழிகளை
நீங்கள்
மூடிவிட்டாலும்
உங்கள்
பழைய துணைகளில்
இன்றும்
நீங்கள்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்லறையில் உறங்கும் புனிதங்கள்

சொந்தத் தேவைகள் நிறைவு செய்யாது
சொந்தம் விட்டோடி ஈழமண் மீட்பதற்கு
சொந்த ஊர்விட்டு சென்றீர் எம்மை
சொந்தங்களோடு வாழ வைப்பதற்கே
உல்லாசப் பயணங்களை ஊதியெறிந்து
உறங்காத தாயக நினைவுடன் மடிந்து
உலகம் போற்றும் சரித்திர மனிதர்கள்
உங்களை நாம் நாடோறும் வணங்குகின்றோம்.
புயலாய் எழுந்தே தீமைகள் அழித்தீர்கள்
புறஞ்செறிந்த காவியம் இங்கே படைத்தீர்கள்
புதியதோர் வரலாற்றுப் பாதையிலே நீங்கள்.
புனிதத்தின் விதையாகி மண்ணில் புதைந்தீர்கள்
முகங்கள் எமக்கு தெரியாது
முத்தான உயிரை எமக்கீந்து
முடிவொன்று காணப் பிறப்பெடுத்து
முத்திபெற்று மிகுபுகழும் அடைந்தீர்கள்
கனவினைச் சுமக்கும் நாளிலே
கல்லறையில் உறங்கும் புனிதருக்கு
கார்த்திகையில் தூய மலர் தூவி
காணிக்கை செய்கிறோம் நெய் விளக்கே!

**க. சங்கீதன்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழிநீரில் விதைமுளைக்கும்

**– ஜெயா –**



வற்றாத பெருநதியின் வயிறதுபோல்
எப்போதும் எம்மண்ணில் புலிகள் பிறப்பார்கள்.
ஒன்றுவிழ மற்றொன்று.. அதைத்தொடர்ந்து இன்னொன்று..
இப்படியாய்..
பணிசுமந்த வீரரின் சங்கிலித்தொடர் அறுதல்
சாத்தியமாய் ஆகாது.
எப்போதும் எம்மண் ஈரம் நிறைந்தது.
உடலம் வித்தாகி வீழ்ந்த மறுகணத்தே
புதிய புலிவேங்கை விளையும் பூமியிது.

மணல்கிளறி கல்பிளந்து
நீரின் ஊற்றை கண்டறிந்த பின்னாலே..
பீறிக்கிளம்பும் நிலத்தடி நீர்விசைபோல்..
இப்போது எம்மண்ணில் விடுதலையின் பிரவாகம்.

நெஞ்சில் கனல்மூட்டி
விடுதலையே குறியாகி
கண்ணீறைந்துபோன களப்புலிகள் பெயர் சொல்லி
கலங்கியழும் போதெல்லாம்..
நம் மண் நனைகிறது.
புது விதை பிளந்து வேர்விட்டு மரமாக..
ஈரம் பிறக்கிறது.

வேங்கைவீரன் புதையுண்ட கோவிலிலே
மெய்சோர மேனி சிலிர்க்க..
அற்புதமான அந்த அன்பின் உறைவிடத்தை
நெய்விளக்கேற்றி நினைவில் கசிந்துருகி....
நெருப்பை சுமந்த வயிறு கதறி அழுவதுவும்
கைநீட்டிப்பிரிந்த உறவின் பணிதாங்கி..
நெருப்பாகி நிற்கின்ற புலிமகன் கலங்குதலும்
வற்றாத ஊற்றின் சாட்சியங்கள்.

வெட்டிச் சரிக்கஒண்ணா விடுதலை விருட்சத்தை,
தமிழன் வீரத்தின் வீழ்ந்துபடா வீரியத்தை,
விடுதலைக்காய் தந்த அர்ப்பணிப்பின் அற்புதத்தை,
விடுதலை செழிக்க கொட்டிய உயிர்களை..
விருப்புடன் சிந்திய குருதியை..
நோவை வலியை வரலாற்றுத் துயர்களை..
நீளக்கிடக்கின்ற புலிவீரர் கோவில்களே கூறும்.

எல்லோரும் ஒன்றாகி.. ஓர் பொழுதில்
கையில் விளக்கேற்றி, நெஞ்சம் துயர்கவ்வ,
கசிந்துருகி கலங்கியழும் போதினிலே..
ஈழம் பிறக்கின்ற, பிரசவத்தின் வலிதெரியும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெருப்பு மனிதர்கள்

**ஜூலை 05,** கரும்புலிகள் நாள் 1987ஆம் ஆண்டு இன்றைய தினத்தில்தான் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் 'கரும்புலிகள்' என்னும் போர் வடிவம் அறிமுகம் செய்யப்பட்டது இத்தினத்தில்தான் 'ஒப்பரேசன் லிபரேசன்' நடவடிக்கைக்கு எதிராக முதற் கரும்புலி கப்டன் மில்லரினால் நெல்லியடியில் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

அன்று வெளிப்பட்டுத்தப்பட்ட இப்போர் வடிவம். தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் இலட்சியப்பற்று, அர்ப்பணிப்பு, மனோபலம் என்பனவற்றிற்கு அடையாளமாக இன்றுவரை உள்ளது. இப்போர்வடிவம் இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் திருப்பு முனைகளுக்கும் நகர்வுகளுக்கும் காலத்திற்குக் காலம் அடித்தளமாகவே இருந்துள்ளது எனின் அது மிகையானதல்ல.

அத்தோடு மட்டுமல்ல இன்றைய நிலையில் தரையிலும். கடலிலும் சிறீலங்கா ஆயுதப்படையையும், அரசையும் கதிகலங்கச்செய்யும் ஓர் அம்சமாக அது உள்ளது. இதேசமயம் சிறீலங்கா இரணுவத் தினருடன் விடுதலைப் புலிகளுக் குள்ள ஆளணி மற்றும் ஆயுத தளபாடச் சமநிலை இன்மையைச் சீர்செய்யும் ஓர் வடிவமாகவும் இக்கரும் புலிகள் உள்ளனர் எனலாம். அதாவது, இராணுவ ரீதியிலான சமநிலைக்கு இக்கரும்புலிகளின் பங்குமிக உயர்வானதாகும்.



விடுதலைப் புலிகள் அமைப்பைச்சேர்ந்த போராளிகள் அனைவருமே அர்ப்பணிப்பு மிக்கவர்கள்தான் இதனை உலகம் நன்கே அறியும். விடுதலைப் புலிகளின் இலட்சியப்பற்று, உறுதி, அர்ப்பணிப்பு என்பனபற்றி எதிர்த்தரப்பினரே ஆச்சரியப் படுவதுண்டு இவ்வாறு இருந்தும்கூட கரும்புலிகள் இவர்களில் இருந்து வேறு பட்டவர்களாக உள்ளனர். இதற்கு இவர்களின் வேறுபட்டவகையான ஈகமே காரணம் எனலாம்.

கரும்புலிகளின் செயல்கள். அர்ப்பணிப்புக்கள் சாதாரண மனிதர் ஒருவரினால் எண்ணிப்பார்க்கக்கூட முடியாதது. ஏனெனில், தனிமனித அபிலாசைகள் இதற்கு இடமளிக்க மாட்டாது. அத்தோடு, கரும் புலிகள் ஆவதற்கு தனியாக மனித அபிலாசை களைத் துறந்தால் மட்டும் போதாது மரணத்தை விஞ்சிய மனோபலமும் இதற்கு அவசிய மானதாகும். அத்தோடு, நுட்பமான போரியல் ஆற்றலும் அவசியமான தாகும். ஏனெனில், மரணத்தை மறந்து தனது குறிக்கோளை அடையமுனையும் ஒரு செயல் வீரனின் நடவடிக்கை இது ஆகும்.

நெருப்பு மனிதர்கள்

www.tamilarangam.net

தமிழீழப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகள் புரிந்துள்ள சாதனைகள் மகத்தானவை. அத்தோடு சிங்களப்படைத் தரப்பை மிகவும் அச்ச முறவைக்கும் இக்கரும்புலிகள் சிறீலங்கா இராணுவ இயந்திரத்தையும், ஏன் சிறீலங்கா அரசைக்கூட பலதடவை ஸ்தம்பிக்கச் செய்துள்ளனர். சிறீலங்கா அரசியல் வரலாற்றின் போக்கில்கூட மாற்றங்களைச் செய்துள்ளனர். இவ்வாறான மாற்றங்களுக் கெல்லாம் கரும்புலிகளின் மரணத்தையும் விஞ்சிய செயல்களே காரணமாகும்.

இவ்வாறான விளைவுகளுக்குக் காரணமாக வுள்ள கரும்புலிகளின் அர்ப்பணிப்புக்கள்-தியாகங்கள் என்பனவற்றை அந்நியர்கள் எவராலுமே புரிந்துகொள்ளமுடியாது. ஏனெனில், இது இம்மண்ணின் மைந்தர் களின் தனித்துவச் சிறப்பாகும். ஆகையினால் மண்ணின் மைந்தர்களைத் தவிர அந்நியர்களால் இதனை விளங்கிக் கொள்வது கடினமே. ஆனால் இக்கரும் புலிகள் தமது மண்ணிற்காகவும் மக்களுக் காகவும் தமது சாவையே உடலில் சுமந்து செல்பவர்கள் என்பதை உலகம் புரிந்து கொள்வதில் சிக்கல் இருக்க மாட்டாது.

இதேசமயம் எவ்வாறு கரும்புலிகள் பற்றி வெளியாரினால் புரிந்து கொள்ள முடியாதோ அதேபோன்று கரும்புலிகள் நடத்தும் தாக்குதல்களின் விளைவுகளும் உடனடியாக மதிப்பீடு செய்து கொள்ளக் கூடியவை அல்ல. ஆயினும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட இராணுவ-அரசியல் வரலற்றில் பெரும் திருப்பங்கள், மாற்றங்கள் என்பவற்குக் கரும்புலிகள் ஆற்றிய பங்கு, பணிகள் மிகப்பெரியவை. இந்தவகையில் பார்க்கையில், தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் “கரும் புலிகள் எமது இயக்கத்தின் தற்காப்புக் கவசங்கள் எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள் எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்” எனக்கூறியமை முற்றிலும் ஏற்புடையதே ஆகும். இவ்வாறான இம்மாவீரர்கள் தமிழ்மக்களின் வணக்கத் திற்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள். இவர்களை நினைவுகூருவதும் போற்று வதும் தமிழ்இனத்தின் கடமையாகும். இதுவே தமிழ் இனத்தின் எதிர்கால சுதந்திர வாழ்விற்கு வித்திடக்கூடியது மாகும்.

## ஒளிப்பறவைகள்

உயிர்க்கூட்டின்
எங்கோ ஓர் பொந்திடை
சிறகொடுக்கி ஒளித்திருக்கும் உயிர்ப்பறவை
பறந்துவிடும் என்ற பயம்
பொத்திப் பொத்தி பதுக்கிவைத்திருக்கும்
சிறு துவாரம் தோன்றினும்
பதை பதைத்து அதையடைக்கும்
உயிர்ப்பிரியம்
சிறிதுமில்லையோ உங்களுக்கு
அற்பமாகப் பிடித்து
தலை தடவி
சிறகு நீவிப்பறக்கவிடும்
உங்கள் மனமுடிச்சின் சூத்திரம் என்ன
காற்றில் வாழும் பறவைகளே!



www.tamilarangam.net

# வீதியா... அது உன் விதி

தமிழன உரிமைமீட்புப் போரிலே
என்னுயிர் துறப்பது எனக்கு வரலாறே -
அறிவேன்.
சாவின் சிறப்பும் அதுவென
உணர்வேன் - இருந்தும்
என்னுயிர் துறக்கப் பயம்.
எப்போதாவது என்னுயிர்
என்னைவிட்டுப் பிரியும் - அறிவேன்.
என்னசெய்ய - இன்னும்
என்னுயிர் பிரிவதை எண்ணிப் பயம்.
எறிகணைகளும்
எதிரி விமானங்களும்
என்றோ ஒருநாள்
என்னுயிரைப் பறிக்கலாம் - அறிவேன்.
எனினும் - இன்னும்
என்னுள் வீரம் பிறக்குதில்லையே.
இருண்டுவிட்டால்......
வெளியில் செல்லப் பயம்.
பேய் வரும் என்று - என்
பெற்றோர் ஊட்டி வளர்த்ததால்.
அந்த நினைவு அழியுதில்லையே.
முயல்கிறேன் - ஆனால்
என்னால் இயலவில்லையே.
என்னுள் பயம்
எப்படிக் குடிகொண்டது?
வீட்டினுள் வாழ்ந்தேன் - எனைச்
சுற்றிலும் வேலிகள் பல.
வீட்டார் இட்டதைத் தவிர - நான்
வேறு செய்ததில்லை.
உறவுக்குப் பயம் - எனக்கு
ஊருக்குப் பயம்.
காறி உமிழ்பவர் பலரிருப்பர் - நான்
அவர்களுக்குப் பயம்.
வேலியால் எட்டிப் பார்த்தால்
வீதியால்செல்பவர்
என்ன நினைப்பார்.....
கூரையில் ஏறப்பயம்
குடத்துடன் தண்ணீரள்ளப்போனா......
தலை நிமிர்ந்து நடக்கப்பயம் - இப்படியே
ஆயிரம் பயம்.......... பயம்.
அப்போதெல்லாம் எனக்கு நானே பயம்.
வாழ்ந்த மண்ணில் - குண்டு
வீழ்ந்தது - எதிரியின்
வேட்டொலி கேட்டது.
ஊர் பயந்ததால் - உறவுகள்
வேரிழந்தன.
உறியில் உள்ளதை மட்டும்
எடுத்துக்கொண்டு
ஊர் துறந்தது.
ஓடினோம்.....
தேடினோம் அகதி வாழ்வை.
வீதியோரம் விழித்திருந்தோம்.
நிம்மதியைத் தொலைத்திருந்தோம்.
அப்போதும் அந்தப் பேய் இருட்டு.
ஆனால் பீதியுறவில்லை - ஏனெனில்
இழப்பதற்கு எதுவும் இல்லை......
எம் முயிரைத்தவிர.
உணவு இல்லாப் பஞ்சம்
எமை வாட்ட
உணர்வு இல்லாத் தமிழன் என
எவர் சொன்னார்.
உரிமையில் ஆசையிருக்கு
உள்ளத்தில் உணர்விருக்கு
உண்மையில் எம்மக்களில் அன்பிருக்கு.
உரிமையைவிட உயிர் பெரிதில்லை -
அறிவேன்.
அடிமை வாழ்வைவிட சாவது மேலானது
அதையும் அறிவேன்.
என்னுடன் நான் போராடி- ஒரு
இனிய முடிவெடுத்தேன்.
வீதியா.....
பகையே! உனக்கு அதுதான் விதி.
நாம் உயிர்வாழப் போர் வேண்டும்.
எம் இனம் வாழ- நான் போராட
வேண்டும்.
எம் எல்லைகளை வகுக்கின்ற வல்லமை -
பொறிகக்கும்
போர்க்கருவிகளுக்குத்தான் உண்டு.
தேசத்தின் விடிவுதான் - எம்
சோகத்தின் முடிவு.
அப்படியானால்.....
இப்போது நான்
மாங்குளத்திற்கு மகுடம் சூடும்
எம்மண்ணாலான காப்பரணினுள்
காத்திருக்கின்றேன் - கையில்
துப்பாக்கியுடன் - என்
கண்களில் பெரும் கனலேந்தி.
அப்போது கேட்ட அதே வேட்டொலிகள்
இப்போது மிக அருகே - என்
செவிகளுக்கு இனிமையூட்டிக்கொண்டு.
எறிகணைகளின் இரைச்சல்களை
இரசிக்கின்றேன்.
போர் விமானங்களின் ஓசையும்
ஒரு வகைச் சங்கீதமென இருக்கும்.
இருளுக்குள் இருளாக
எதிரியின் வருகையை
எதிர்பார்த்த வண்ணம் நான்.
இப்போதெல்லாம்......
பயத்திற்கு என்னை அணுகப்பயம்.
வழியா பிடிக்கப்போகின்றாய்?
வா
வாசலில்தான் நாமும்
வழியில்தான் எம் விழியும்
வெற்றியா வேண்டும்....?
வா
அந்த வெறியுடன்தான் நாமும்.

– போராளி கோமளா
மாங்குளம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒளி தந்த தீபங்கள்

## க.டே.கிஸ்காட்

*அதோ! அவர்கள் யாரென தெரிகிறதா*
*தெரியவில்லையா தென்றலே*
*இருளினுள் பிறந்து*
*ஒளியைத் தேடி போராடும் பூக்கள்*
*பூவுக்குக்குள் புயல் உண்டென உணர்த்தியவர்கள்*
*இருளில் ஒழிந்த சுதந்திரத்தை பெற*
*ஆசைகளனைத்தையும் துறந்த அக்கனி பூக்கள்.*
*புயலை எதிர்த்து இவர்கள்*
*நிற்பது துரும்பாகவல்ல*
*இரும்பாய் மலர.*
*தூங்கா விழியுடன் காத்திருப்பது*
*சாவை வெல்ல*
*அவர்கள் போகும் பாதையில்*
*பூப்பது பூக்கள் அல்ல பூகம்பங்கள்*
*அவர்கள் சுவாசிப்பது காற்றை அல்ல*
*நெருப்பை.*
*அவர்களின் பயணத்தின் முடிவு*
*தமிழரின் சுதந்திர விடிவு.*
*இறவாப் புகழுடன்*
*புதைவார்கள்*
*மறவாத மனிதராய்*
*நெஞ்சில் வாழ்வார்கள்*
*அவர்கள் தான்*
*எம் தேசத்தின் காவலர்கள்.*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



கருவறையில் சுமந்தபிள்ளை விதை குழியில்....
கதறித் துடித்து துயர்கரைத்து...

கண்ணீரால் அஞ்சலித்து
பின் எழுந்து...
பெருமைகொள் பெருந்தாயே!

www.tamilarangam.net



வேராக விழுதாக விடுதலைப்போர் தாங்கும்
மாவீரர் உம் கனவுகள் விரைவினில் நிறைவேறும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நான் யார்?
நான் எதற்காக வாழ்கின்றேன்?
என் வாழ்வின் தேடல் என்ன?
என்பது எனக்குத் தெரியும்.
எனக்கு மட்டுமல்ல, என் எதிரியாக
என் முன்னால் விரிந்திருக்கும் காவலரண்களில்
நிற்கின்றார்களே உயிர்குடிக்கும் துப்பாக்கியுடன்.
அந்த உயிரின் பெறுமானம் அறியாத உயிருள்ள
மனிதப் பிறவிகளுக்கும் கூடத் தெரியும்.
எனக்கும் எங்கள் எதிரிக்கும் தெரிந்தது
போலவே என் மக்களுக்கும் நான் யார்?
நான் எதற்காக வாழ்கிறேன்?
என் வாழ்வின் தேடல் என்ன?
என்பது நன்றாகத் தெரியும்
நான் ஒரு போராளி. போராளி என்பதற்காக
நாங்கள் போராடுவதற்காக வாழ்பவர்கள் அல்ல
வாழ்வதற்காகப் போராடுபவர்கள்.
கொல்வதற்காக எல்லையில் காத்திருப்பவர்கள்
அல்ல நாங்கள். கொல்லப்படாதிருப்பதற்காக
காவல் நிற்பவர்கள். கொலை வெறி கொண்டு,
துப்பாக்கியை எங்களில் எவரும்
இயக்கியதில்லை. கொலை வெறியரால்
எவரும் பலியாகக் கூடாதே என்பதற்காக
துப்பாக்கியை இயக்கியவர்கள். இன்றும்
இயக்குபவர்கள். எவரது உரிமையையும்
பறிப்பதற்காக ஏந்திய இலட்சியமில்லை
எனது தமிழீழம். என்னினத்தின் உரிமை



என்னினத்திற்கே சொந்தமானது என்ற
தர்மத்தை மீட்பதற்காக ஏந்திய இலட்சியம்
என் தமிழீழம். சாவதற்காக வாழ
நிர்ப்பந்திக்கப்பட்டதால் வாழ்வதற்காக
சாவையும் ஏற்கத் தயாரானோம். அது தான்
நடந்தது. "உயிர் உன்னதமானது
என்பதை நான் அறிவேன் ஆனால்
அதனிலும் உன்னதமானது எமது உரிமை.
எமது சுதந்திரம், எமது கௌரவம்"
என்ற கொள்கையில் உயிரைப் பணயம்
வைத்து தன் மக்களுக்காகப்
போராடும் எம் தலைவனின் வழி
நடக்கும் போராளிகள் நாங்கள். இந்தப்
போராளிகளைத் தாங்கி நிற்கும் இனம்
எங்கள் தமிழினம். "கொண்ட கொள்கையில்
குன்றிடாதெங்களின் கொள்கை வீரரின்
காலடி மண்ணிலே நின்று கொண்டொரு
போர்க் கொடி தூக்குவோம். நிச்சயம்
தமிழீழம் வெல்லுவோம்" என்று உறுதி
கொண்ட பூமி எங்கள் தமிழீழம்.

ஆனால் ...ஒரு நாள் மதியம் என் சோற்றை
சுற்றி வந்த பேப்பரை பார்த்தேன்
"மரணங்கள் மலிந்த பூமி" என்று எவனோ
ஒரு மனிதன் (?) தொடர் கதை
எழுதியிருந்தான். எங்கள் பூமி மரணங்கள்
மலிந்த பூமியா?! நான் சுமக்கும் தமிழீழம்
மரணங்கள் மலிந்த தேசமா?! மலிவான

# களத்துமேடு

எழில்

www.tamilarangam.net

மரணங்களுக்காகவா இந்த மகத்துவமான
தியாகங்கள்? இந்த மகோன்னதமான
அர்ப்பணிப்புக்கள்? தமிழீழம் மரணங்கள்
மலிந்த பூமியல்லவே. மரணத்தால்
மலினப்படுத்தப்பட்ட பூமி. மரணத்தால்
மனிதம் மலினப்படுத்தப்பட்டதால்
மனிதத்துக்கு மகத்துவம் அளிக்க இங்கு
ஒரு தர்மயுத்தம். இழப்பில்லாமல்
உன்னதமேது. மகத்துவமான வாழ்வு
இந்தவுலகில் மலிவாகக்கிடைப்பதில்லையே.
என் தேசமும் என் மக்களும்
மகத்துவமான வாழ்வுக்காக கொடுத்த
விலையை விளங்குவதற்கும் மனிதம்
வேண்டும். அப்படித்தான் நான்
உணர்கின்றேன். இதோ இந்தச்
சோற்றுப்பார்சல். நித்தமும் என்னைத்
தொடர்பு கொள்ளும் ஒரே பொருள்.
எப்படியோ ஒரு வழியில் என் மக்கள்
தம் வயிற்றின் சிறு பகுதியையேனும்
கட்டியதால் எனக்கு வந்து சேரும் "பார்சல்"
இது. இது சுவைக்கிறதோ இல்லையோ
இது என் மனதை நிறைக்கின்றது. என்
வயிற்றையும் நிறைக்கிறது. வாழ்வின்
அவலத்தில் நின்ற போதும் போராளிகளைத்
தாங்கி, போரைத் தாங்கி நிற்கும் எம்
மக்களை நினைக்க நெஞ்சு நிறைகிறது.
வேறு என்ன வேண்டும் வெற்றிக்கு?

களத்து மேட்டில் எங்கள் வாழ்வு
கடினமானதுதான். இது மழைக்காலம்.
ஒதுங்குவதற்கு ஓரிடம் இல்லாததால் தவிர்க்க
முடியாது எங்கள் தலைகள் எப்போதும்
நீரைச் சுமக்கும். நாங்களாவது தட்டிவிட்டுப்
போவோம் உடன் இருக்கும் பெண் போராளிகள்
பின்னிய தலையில் நீரைச் சுமந்து....
இந்த நாட்களில் எங்கள் உடல்கள்
நோயைச் சுமந்தன. ஒதுங்க ஆசைப்பட்டு
ஓலை பின்னிக் கொட்டில் போட்டோம்.

அது என்ன செய்யும்? பாவம். நாங்கள்
போட்டது கொட்டிலென்றால் அது
மழையிலிருந்து எங்களைக் காத்திருக்கக்கூடும்.
கொட்டிலென்று அதற்குப் பெயர் வைத்தால்
மாத்திரம் அது கொட்டிலென்று ஆகிவிடுமா
என்ன? ஆனாலும் அடிக்கடி அதற்குள்
தான் போய் நிற்கின்றோம் நனையாமல்
நிற்கும் நப்பாசையோடு. நனைந்தால் பசி
எடுக்கும். உணவை சுமந்து வரும் அந்த
உடைசல் வாகனம் மழை பெய்த வன்னிப்
பாதையில் ஓடமாகி வந்துசேர்வதற்குள் நேரம்
தன்பாட்டிற்குப் போய்விடும். சாப்பாடு
வந்துசேரும். ஆனால் சாப்பிடச் சரிப்பட்டு
வராது. சிலவேளை சோற்றை அள்ளி நீரில்
அலசிச் சாப்பிட்டதுமுண்டு. சோறோ, பிட்டோ
இல்லை இடியப்பமோ எதுவானாலும் கறி
விடுகின்றோமோ இல்லையோ இரண்டு பகிடி
விட்டால் சாப்பிட முடிகின்றது?
அப்படித்தான் சாப்பிட்டு முடிக்கிறோம்.
என்ன செய்ய? காலம் எங்களைக் கசக்கிப்
பிழிகின்றது. காலம்தான் எங்களை
சிகரத்தில் ஏத்தவும் போகிறது. சாப்பாடு
வந்தால் சேர்ந்து பத்திரிகையும் வரும்.
பத்திரிகை சொல்லும்! "நிவாரண வெட்டு"
"தொடர் உண்ணா விரதம்" "வெள்ளத்தால்
இடப்பெயர்வு" செய்திகள் மனதை
உலுப்பும். எப்பவோ வீதியில் போனபோது
வெள்ளை விரிப்பின் கீழ் வாழ்ந்த அந்த
முகங்கள் நினைவில் வரும். அந்த வெள்ளை
விரிப்புக்களால் நிவாரண வெட்டைத்
தாங்கிக் கொள்ள முடியாது என்பது
எனக்குத் தெரியும். அந்த வெள்ளை
விரிப்புக்களால் வருகின்ற வெள்ளைத்தை
எதுவும் செய்து விடமுடியாது என்பதும்
தெரியும். அந்த வெள்ளை விரிப்பின் முகங்கள்
நினைவில் விரிய நெஞ்சில் இடியிறங்கும்.
ஏதோ ஒரு வெள்ளை விரிப்பில் என்
குடும்பமும் கூட. தொலைந்து போன...

எங்கள் வாழ்வுக்கு காரணம் யார்? கலைந்து
போன எங்கள் வசந்தத்திற்கு கர்த்தா யார்?
என்முன்னால் நீண்டிருக்கும் அந்த அரண்களில்
அழிப்பில் ஆனந்தம் கொள்ளும் அந்த
மனிதர்கள் இருக்கின்றார்கள். உரமாய் ஒன்றை
உணர்வேன். " கொல் அல்லது
கொல்லப்படுவாய்" அழிப்பதென்பது அழிவில்
முடியும் என்பதை அவர்கள் உணர்ந்து
கொள்ளும் வரை எங்கள் கால்கள் களத்து
மேட்டில் நடக்கும். உணர்ந்தால் எங்கள் கால்கள்
தமிழீழத்தில் நடக்கும். அதில் என் காலும்
ஒன்றாய் இருக்கும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாழ்வு தந்து போனவர்

**-அன்பு-**

***09.01.1997*** நடுநிசி தாண்டிய அதிகாலைவேளை. ஆனையிறவு - பரந்தன் கூட்டுப் படைத் தளத்தினூடு புலிகளின் அணிகள் நகர்ந்து கொண்டிருந்தன. அந்தத் தளத்தின் அமைவிடம் வலிந்த ஒரு தாக்குதலுக்கு சாதகமற்ற பௌதீகச் சூழலைக் கொண்டிருந்தது. தரவைகள், உப்பு வெளிகள், சிறிய - சிறிய உவர் நீர்க் கடல்கள், இப்படித் தான் இருந்தது அந்தச் சூழல். ணினும் முகாமின் முக்கியத்துவம் நன்கு உணரப் பட்டிருந்தது. போராளிகள் அனைவரும் கண்களில் ஒரு வெறியுடன், "எங்கள் மண்ணை ஆக்கிரமித்தவனை அழிக்கவேண்டும்" என்ற மன உறுதியுடன் நீரற்ற அந்த உப்பு வெளிகளினூடு ஊர்ந்துகொண்டிருந்தனர். அது ஒரு நீண்ட நகர்வு. விடுதலைப் புலிகளின் போரியல் வரலாற்றிலேயே ஒரு வலிந்த தாக்குதலுக்காக, சண்டையை எதிர் பார்த்து எமது படையணிகள் நகர்ந்த நீண்ட நகர்வுகளில் அது குறிப்பிடத் தக்கது. எதிரியின் பிரதேசத்தை ஊடுருவிய நகர்வு. எங்காவது எதிரியால் அவதானிக்கப்பட்டால் அங்கே நகர்ந்து கொண்டிருக்கும் அத்தனை போராளிகளின் உயிரும் கேள்விக்குறியாகும் நிலை.



அங்கே நகர்ந்து கொண்டிருந்த அணிகளில் ஒரு அணியாகத்தான் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அந்தக் குறிப்பிட்ட அணியும் நகர்ந்து கொண்டிருந்தது. முகாமின் ஒரு முக்கிய பகுதியைக் கைப்பற்றும் பணி அவர்களுடையதாக இருந்தது. சிக்கலான அவர்களின் அன்றைய பணியில் எமக்குக் கிடைக்கப் போகும் வெற்றியின் ஒரு கணிசமான பகுதி தங்கி நிற்கிறது.

சண்டை தொடங்கிவிட்டிருந்தது. அவர்களுக்குரிய பாதை வழியாக அந்தக் குறிப்பிட்ட அணியும் சண்டையைத் தொடங்கியிருந்தது. முட்கம்பி வேலிகளை 'டோப்பிட்டோ' குண்டுகள் தகர்க்க, அணி ஒவ்வொரு தடையாகத் தாண்டி நகர்ந்து கொண்டிருந்தது. எதிரியின் இயந்திரத் துப்பாக்கிகள் இவர்களை நோக்கிச் சடசடக்க; அப்போதுதான் அந்தப் பாதையில் உள்ள பிரச்சனை தெரிந்தது அவர்களுக்கு.

ஆம் ஏற்கனவே எமது வேவுத் தரவின்படி அங்கேயிருந்த முட்கம்பிச் சுருள் தடைகளைவிட புதிதாக இன்னுமொரு முட்கம்பிச் சுருள்த் தடையை எதிரி அமைத் திருந்தான். 'செக்கன்'களும் சண்டையின் முடிவைத் தீர்மானிக்கும் ஒரு இக்கட்டான நேரம். நாம் அந்தத் தடையை தாண்டி உள்நுழையா விட்டால் எதிரி தன்னைத் தயார்ப் படுத்தக்கூடும். பின்னர் அந்தப் பகுதியைக் கைப்பற்றுவது இயலா மல்க்கூடப் போய்விடும். புதிதாகக் கிடந்த தடையை உடைக்க 'டோப்பிட்டோ'வும் கைவசம் இல்லாத நிலை. மாற்று வழிகளை பரிசீலிக் கக்கூட நேரம் இல்லாத ஒரு இக்கட்டான சூழல். முட்கம்பியை வெட்டச்சென்ற எங்கள் தோழனும் அரைவாசிக் கம்பிகளை வெட்டிய நிலையில் எதிரியின் ரவைபட்டு வீழ்ந்துவிட, எதிரி அந்த இடத்தில் முட்கம்பிகள் வெட்டப்படாமல் இருப்பதையும், நாம் அவற்றை வெட்ட முயற்சிப்பதையும் கண்டு







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டான். அவன் தன் முழுச் சூட்டு வலுவையும் இப்போது அங்கே மையங்கொள்ள வைத்தான். அது ஒரு வார்த்தைகளின் வர்ணனைக்கு அப்பாற்பட்ட இறுக்க மான சூழல், அன்றைய சண்டையின் முடிவைத் தீர்மானிக்கும் ஒரு அணி அங்கே தடைடைய உடைக்க முடியாமல் நிற்க, தனியொருவனாய் சஜந்தன் நிலைமையை மாற்றி யமைத்தான்.

அந்தத் தடையை அகற்ற வேண்டிய தேவையை அவன் உணர்ந்ததால், அன்றைய சண்டையின் முடிவு கண்களில் பட அவன் அவ்வாறு முடிவெடுத்தான். ஓடிச்சென்று முட் கம்பிச்சுருளின் மீது பாய்ந்தான், நசுங்கிய கம்பியின்மேல் அவன்கிடக்க, அவன் அமைத்துத் தந்த அந்த உயிர்த்துடிப்பான அந்தப் பாதையின் வழியாக இலக்கை நோக்கி நகர்ந்தனர் தோழர்கள்.

அவனது அணி தனக்குக் கொடுக்கப் பட்ட எதிரிப் பகுதியை பிடித்துக் கொண்டு முன்னேறியது. எதிரியின் சூட்டில் விழவேண்டியவர்களாய் இருந்த நிலைமாறி அவனது தோழர்கள் எதிரியை வீழ்த்திக் கொண்டு முன்னேறினர். தாக்குதலின் முடிவில் நூற்றுக்கணக்கான எதிரிகளை நாம் வீழ்த்தியிருந்தோம். எதிரியின் பீரங்கிகளை அழித் திருந்தோம். அந்த வெற்றிக்கு வழி சமைப்பதற்காக தன் உடலால் வழிசமைத்தவன் எங்கள் சஜந்தன்.

உடலின் ஒவ்வொரு உயிர் அணுக் களும் வேதனையால் துடிக்க, அத்தனை வேதனை உணர்ச்சி களையும் தாங்கி எதிரியின் முட் கம்பித் தடையின் மீது பாய்ந்து தோழர்களுக்கு வழிசமைத்தவனின் வீரம் அத்தனையும் அன்றைய சண்டையின் வெற்றிக்காய், அந்த வெற்றியால் தீர்மானிக்கப்படும் அவன் நேசித்த மக்களின் வாழ்விற்காய்.

"எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத் திலிருந்தே பிறக்கின்றது" என்ற தலைவர் அவர்களின் கூற்றுப்படி தனது நெஞ்சுரத்தால் அன்றைய சண்டையை மாற்றியமைத்தவன், பின் ஜெயசிக்குறுய் சமரில் வித்தாகிப் போனான். இவன் போன்ற போராளி களின் தியாகங்களே இன்றும் தொடரும் வழித்தடங்களாக எமக்கு வழிகாட்டி நிற்கின்றன.

## மாவீரர்கள்

*மாவீரர்கள் எம்*
*மண்ணின் மைந்தர்கள்*
*மானமே பெரிதெனக் கொண்டு*
*மண் மீட்க எழுந்தவர்கள்*
*மறத்தமிழன் யாரென*
*மானிடர்க்கு உணர்த்தியவர்கள்*
*மன்னவனாம் எம் தலைவனின்*
*மனத்தில் நிலையானவர்கள்*
*மரணத்தின் வாயிலில் நின்று*
*மறப்போர் தொடுத்தவர்கள்*
*மனவுறுதியை உரமாக்கி*
*மக்களுக்காய் உழைத்தவர்கள்*
*மலரும் தமிழீழத்திற்காய்*
*மனவுணர்வுகளை துறந்தவர்கள்*
*மனிதத்தை வென்றுவிட்ட*
*மாமனிதர்கள் இவர்கள்*
*மமதையுடன் வந்த எதிரிகட்கு*
*மரணப்பாடம் புகட்டியவர்கள்*
*மண்ணின் விடுதலைக்காய்*
*மாவீரர் ஆனவர்கள்*
*மலர்கின்ற தேசத்தில் மீண்டும்*
*மலர்ந்து உயிர் வாழ்வார்கள்*

**- போராளி செந்தமிழ் -**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலட்சியவாதிகள் சாவதில்லை



திருநகரூர் ஜெகா

நீங்கள்
துகள்களாக சிதறிப்போனதையும்
உடல் சிதைந்து. உருவமின்றி
கிடந்ததையும் பார்த்து
உங்களை கொன்றொழித்துவிட்டதாய்
இவர்கள் சொல்கிறார்கள்.
பொய்! நிச்சயமாகப்பொய்.
உங்கள் உடல்கள் எங்கெங்கு விதைக்கப்பட்டனவோ?
அங்கெல்லாம்
சூரியன் ஜொலிக்கிறது.
கல்லறைகளின் உள்ளிடங்களிலும் கூடத்தான்.
உங்களின் ஒளி
பற்பல ஜீவன்களின் ஆகாரமாகி
மண்ணாகி மரங்களாகி பரிமாற்றம் கொள்ளும்
*கனியுப்பு. நீர் போன்ற இன்னபிறவெல்லாமாகி
சூழலின் இயற்கை வட்டத்துள்
உணர்வூறிய அணுக்களெல்லாம்
அங்கம் வகித்து.
எங்கள் சுவாசப்பையை நிறைக்கும்
உணவுக்கால்வாயை நிரப்பும்.
தென்றலாய் வருடிவிடும்.
நீங்கள்
எப்போதும் எங்களுக்குள் உயிர்ப்பீர்கள்.
நீங்களே நாங்களாவோம்.
அவ்வாறெனில்.
நீங்கள் இறந்ததென்பது?
வெறும் பிதற்றல்.
ஏனெனில்
நீங்கள் இலக்கை நோக்கி
மீண்டும் மீண்டும்
எழுவீர்கள் நாங்களாக.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேருக்கு நீராகி...

எமது தேசவிடுதலைப் போராட்டமானது மக்களின் பக்கபலத்திலும், எண்ணற்ற தியாகிகளின் குருதியிலும் உரமேறி ஓங்கி வளர்ந்து நிற்கின்றது.

பல இடையூறுகள், துன்பங்கள், துயரங்களுக்கு மத்தியிலும் எம்மவர்களுக்கு உண்ண உணவு கொடுத்து, எதிரிப்படைகளின் கோரப்பிடிகளுக்குள் சிக்காமல் தம் சிறகுகளால் மூடி, அவர்களின் நடமாட்டங்களையும், நகர்வுகளையும் அவதானித்து தகவல்களும், ஆயுதங்களும், உணவுப் பொதிகளும் சுமந்து, இந்த மண்ணில் வீரப்புதல்வர்களை, காவல் தெய்வங்களை வளர்த்தவர்கள் எம் மக்கள்.

உணவு கொடுத்து உதவிகள் புரிவதோடு மட்டும் நின்றுவிடாது, உயிர் கொடுக்கவும் துணிந்து நின்று நாட்டுப்பற்றாளர்களாகவும், நிமிர்ந்த எம் மக்கள் நினைவில் நிறைகின்றனர்.

தம் தாயக மண்ணின் விடுதலைக்காகவே சிறீலங்கா அரசகூலிப்படைகளினதும், அயல் தேசங்களிலிருந்து அமைதிக்காகவென வந்த பாரதப்படைகளினதும், தாயகத்துமண்ணின் விடுதலைக்கென ஆயுதமேந்தி அரசபடைகளின் கைக்கூலிகளாகிப்போன எமது நாட்டின் தேசவிரோதக் கும்பல்களினதும் துப்பாக்கி ரவைகளுக்கும், கத்திகளுக்கும் பலியாகிப்போன 250இற்கு மேற்பட்ட தேசப்பற்றாளர்கள் இன்றுவரை தம் உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர்.

அந்நியப்படைகளின் அநீதிக்கெதிராக அகிம்சைப்போரில் குதித்து 32 நாட்கள் உண்ணாவிரத நோன்பிருந்து பசியென்னும் தீயினிலே உருகி தன் உயிர் நீத்தவர் அன்னை பூபதி.

போராளிகளை அரவணைத்து உண்டிகொடுத்து ஆதரித்ததனால் புளொட் தேசவிரோதக் கும்பல்களினால் சுடப்பட்ட பாக்கியமக்கா.

விறகு கட்டையால் புலிகளை மூடிவிட்டு, தன் சேலையை அதன்மேல் காயவிட்டு, மேலே ஏறியிருந்து சிங்களக் கூலிப்படைகளின் கண்களில் மண்ணைத்தூவி காத்து, சிறீலங்காப் படைகளாலேயே சுட்டுக்கொல்லப்பட்ட சரோக்கா.

விடுதலைப் புலிகளுக்கு உணவளித்துக் கொண்டிருக்கும்போது திடீரென வீட்டைச் சுற்றிவளைத்த இந்தியப்படைகளுக்கும், தேசவிரோதக்கும்பல்களுக்கும், புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் அந்த புலிவீரர் சயனைற் அருந்தி வீரகாவியமாக மீதி சயனைற்றை தானும் உண்டு உயிர்துறந்த மஞ்சுளாதேவி.

இன்னும் இந்தியப்படைகளாலும், தேசவிரோதிகளாலும் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்ட லிங்கையா, பொன்னம்பலம், கைலாயநாதன், நித்தியானந்தன், யோகன், சின்னையா, கருணானந்தசிவம்மாஸ்ரர், மனோகர், செல்லமுத்து, சிவஞானவதி, செல்வராணி, செல்வமக்கா, சிவக்கொழுந்து, இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்ட செல்வி சோபா என்னும் தியாகிகள் பெயர்கள் நீண்டு கொண்டே செல்கிறது.

மாவீரர்களை நினைவுகூரும் இவ்வேளையில் பலவழிகளில் தம்மை தியாகம்செய்து விடுதலைக்கு உரம் ஊட்டிய ஏனைய தாயகப்பற்றாளர்களையும் நினைவுகூர்வதுடன், அவர்களுக்காகவும் தலை வணங்குகின்றோம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 27 தேதி இன்று இருபத்தேழு



தேச விடியலுக்காய்
தேகம் கொடுத்தவரே
எங்கள் வான்பரப்பில்
இன்று மிளிருங்கள்.
மண்ணை நேசித்து
விண்ணில் வாழுமெங்கள்
மான மறவர்களே!
இன்று நாங்கள்
எங்கள் மண்ணில்
உம்மை வணங்குகிறோம்.
ஆதவனும் மேற்குவானில்
மெல்ல மறைகின்றான்
ஆறு ஐந்தாக நேரம் ஆகிறது
காற்றும், கடலும், வானும், வயல்வெளியும்
ஈழமண்ணெங்கும் அமைதி கொள்கிறது.
நீங்கள் துயிலுகின்ற
புனித இல்லங்களில் ஜோதி எழுகிறது
உங்கள் உணர்வுகளை
நெஞ்சில் தாங்கியவாறு
நாங்களும் உறுதியாகின்றோம்.

கற்சிலையூர்நாகேந்தி.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுவானில் சூரியன்கள்!



பூங்காற்றும்
பறைசாற்றும்
போர் வீரர் உம்முகத்தில்
தீர்மானத் தெளிவிருக்கும்.
உங்கள் உறவுகளை
கண் நிறை கனவுகளை
தங்க மணி மண்ணுக்காய்
தனைப் பரிந்து போர்செய்து
எங்களோடு ஒன்றாகி
எம்முள் இருந்தவரே!
எங்களுக்காய் உயிர் கொடுத்து
எதிரீயை வென்றவரே
மங்காப் புகழுடன் மாண்டீர்
தங்காப் பகையாய்
தரை சாய்த்தீர்
ஏங்கி நீற்கின்றோம்
எனினும் உம் நினைவை
தாங்கி நடக்கின்றோம்
எம்மக்கள் எண்ணமதில்
எழும் சூரியனானவரே
உம் கனவு நனவாகும்
ஒரு காலம் விடிவுபெறும்.

**- க. வீரா**



# சுதந்திரத்தைத் தேடி...

வெட்ட வெளியும்
வெந்தணல் நிலமும்
நேற்று வரைக்கும்
நெருப்பாகி
கால்களை
சுட்டெரித்தன.
அதனால்
நடக்க மறுத்தோம்.
ஆனால்,
இன்றோ
எதிரிப்படையின்
பாசறை தகர்த்து
எங்கள் பூமியில்
செங்கொடி நாட்ட
எரியும் தழலாய்
விரைந்து நடக்கின்றோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிச்சயம் நாளை

வேதனைகள் தாங்கி
சாதனைகள் புரிந்திட்ட
எங்கள்....
வீரக்குழந்தைகளே!!
விதையாக வீழ்ந்தீர்
விருட்சமானீர்கள்
விழுதெறிந்து
மனவுறுதி தந்து
உரம் சேர்த்த
தோழர்களே...
நீங்கள் ஒவ்வொருவர்
விழும்போதும் எமக்கு
மனவுரமானீர்கள்
உங்கள் தியாகம்
எங்கள் கால்களில்
வேகம் கூட்டின.
எமது தோளோடு
உறவாடி உணவுண்டு
விளையாடி மகிழ்ந்த நாட்கள்
உமது நினைவுகள்
எமது மண்ணில்
பதிந்த சுவடுகள்
அடுத்த எம் சந்ததிக்கு
வரலாறுகள்
சோதரரே!
நிம்மதியாக துயில்கொள்வீர்
நெடிதான பயணத்தில்
தாயக மனையின்
அத்திவாரமானீர்கள்
நாளையே நாமும்
மண்ணை முத்தமிடலாம்
விழ விழ எழுபவர்
புலிகள் என்பதால்
என்றோ ஒரு நாள்
மிக மிக விரைவில்
சுதந்திர தமிழீழம்
மலர்வது நிச்சயம்.

**இன்மொழி**



# புதிய வரலாறு

வாடிய எம்மின வாழ்விற்காய்
வரிப்புலியாய் எழுந்திட்ட தமிழ் வீரக்கதைகேளீர் ;
தமிழர் வீரம் உலகமறிந்த
சோழ வரலாற்றை சோதரரே நீர்கேளீர்,
தமிழனுக்கென்று சொந்த
நாடினி இருக்காதென்று
மார்தட்டி முன்வந்த பகைதனை
மண்டியிட்டு ஓடவைத்த மாவீரர் கதைகேளீர்,
சாவுக்கு இலக்கணம் வகுத்த
சத்திய நாதர்கள் வாழும்
பழந்தமிழர் ஊர்க்கைதகேளீர்,
கரிகாலன் படை மண்மீட்க
களத்தினிலே உதவிடுவோம் வாரீர்!
கண்காணா தேசத்தில் பகை
கட்டியாளும் எம்முறவின்
சோகக் கதையழிய,
சோதரராய் நாம் சேர்ந்து,
சோகம் என்ற சொல் களைவோம் வாரீர்,
உறுதி கொண்ட எம் தலைவன் படையணியின்
மெய்யான சேதியினை மேன்மக்கள் அறிந்திடுவீர்,
எலும்புத் துண்டுக்காய் கருத்தில்லாப் பொய் கூறி
எட்டப்பர் கூட்டமாய் நாம் வாழமாட்டோம்
எந்த நாட்டில் தமிழர் நாம் வாழ்ந்தாலும்
முந்தையர் நாடிழக்க தமிழர் நாம் மாட்டோம்
களை இழந்த எம் இனத்திற்காய்
களம் ஆடும் எம் வீரருக்கு
பக்கதுணை நாம் நிற்போம்

**ஜெ.உலகமுதன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தாய்நிலத்தில் பற்றுவைத்து..
விதைகுழியில் புதைந்தவரின் கோவிலிலே.
பற்றறுத்தோர்கூட கலங்கியழும் காட்சி !

www.tamilarangam.net

நவம்பர் 27
# மாவீரர் நாள்



## விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரன்
# லெப்டினன் சங்கர்

ஒரு நாள் அதிகாலை, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டை சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காய மடைந்த விடுதலைப் புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து. இராணுவத்தினால் அந்த வீடு முற்றுகையிடப்படுகிறது.

அவ்வேளையில் ஒரு இளைஞன் முற்றுகை யிட்டவர்களை நோக்கி தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டு மதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான்.

அவனை நோக்கி சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கிவேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப் படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலும்கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல் தூரம் இடைவிடமால் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத்துப்பாக்கியை ஒப்படைத்துவிட்டு கீழே விழுந்து மூர்ச்சை யாகிறான். வயிற்றில் ஏற்பட்ட காயத்திலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறியமையினால் இரும்பை ஒத்த அவன் கட்டுடல் சோர் வடைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டமாகையால், அப்போது அங்கு போதிய மருந்துவவசதி ஏற்படுத்தப்படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனைத் தோழர்கள் விசைப் படகுகள் மூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்திற்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை, முற்றுகை இவற்றைத் தாண்டி தமிழகம் செல்ல ஒருவராமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும்வரை அவன் நினைவு தப்பவில்லை; இருந்த போதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்து, அவனைப் பிழைக்கவைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்க வில்லை. தலைவரும் தோழர்களும் கண்கலங்கி நிற்க (27.11.1982இல்) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற் களப்பலியாகும் பெருமையை அணைத்துக் கொள்கின்றான்.

அவன்தான்

## லெப்டினன் சங்கர்

சுரேஸ்

சிங்கள ஆயுதப்படையினர் வலைவிரித்துத் தேடிவந்த செ.சத்தியநாதன் வடமராட்சியைச் சேர்ந்த கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கர் அதே இடத்தைச் சேர்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலஞ் சென்ற கப்டன் பண்டிதரின்(ரவீந்திரன்) பள்ளித் தோழன்.

(லெப்டினன் சங்கர் இறந்து இரண்டு ஆண்டுகளின் பின் இராணுவ முற்றுகையின் போது அச்சுவேலியில் ஏற்பட்ட நேரடி மோதலில் கப்டன் பண்டிதர் வீரமரணம் அடைந்தார்)

சங்கர் அச்சம் என்றால் என்னவென்று அறியாத அடலேறு இருபது வயதிலேயே தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்ட கெரில்லாவீரன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன், ஒரு சின்னப்பிசகு என்றாலும் கையோடு வெடித்து ஆளையே முடித்து விடக்கூடிய வெடி குண்டுகளின் தயாரிப்புகளிலும் அச்சமில்லாது ஈடுபடுவான்.

அரச படைகளின் தீவிரக் கண்காணிப்புக்கு அவன் இலக்காகியிருந்தாலும் அச்சம் எதுவுமின்றி கிராமங்களில், வீதிகளில் சாதாரணமாக உலவி வருவான். அதே நேரத்தில் சுழன்று கொண்டிருக்கும் அவன் விழிகள் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை நுணுக்கமாக அவதானித்த படியே இருக்கும். தான் அறியாது செய்யும் சின்னத் தவறுங்கூட ஒரு கெரில்லாவீரன் என்ற முறையில் தனக்கும் இயக்கத்திற்கும் ஆபத்தை ஏற்படத்தும் என்பதில் சங்கர் எப்போதும் விழிப்பாயிருப்பான். அரச படைகளின் கையில் சிக்க நேருமானல் எதிரிகளில் ஒருவனையாவது வீழ்த்திவிட்டுத் தானும் சாவது என்பதில் அவன் அசைந்தது கிடையாது. இருபத்தொரு வயதில் அவன் சாதித்தவை தமிழீழப் போராட்ட வரலாற்றுக்குச் சொந்த மானவை. இனிமேல் சாரணர்களை அனுப்பி வடக்கில் புலிப்படையை அடக்கிவிடமுடியும் என்று பாசிசசர்வாதிகாரி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறீலங்காத் தலைநகரில் பிரகடனம் செய்த போது நெல்லியடியில் அரசபடைகள் மீது சங்கர் நடத்திய கெரில்லத்தாக்குதல் தமிழீழம் காணும் வரை தமிழீழப் போராட்டம் ஓயாது, ஒழியாது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டியது. ஜீப்சாரதியின் மீது வெற்றிகரமான முதல் தாக்குதலைநடத்தி, ஜீப்வண்டியை நிறுத்தவைத்து, கதவைத் திறந்து சாரதியை ஒருகையில் வெளியே இழுத்து எறிந்தவாறு மறு எதிரியை நோக்கி குண்டுகளைத் தீர்த்த யாவகம் சங்கருக்கே உரியது. இருப்பிலிருந்து ரிவால்வரை எடுத்த மாத்திரத்தில் குறி வைக்கும் அவனது சாதுரியம் அசலானது; நெல்லியடியில் அரசபடையினர் பீதியுற்ற நிலையில், சங்கர் கால்களை அகல விரித்து பக்கவாட்டில் நின்ற அரச படையினர் மீது குண்டுமாரி பொழிந்த காட்சி இப்போதும் நம் கண்களில் நிழலாடுகிறது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது சீலனின் தலைமையில் நடைபெற்ற கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு சங்கரின் பங்கும் கணிசமானதாகும். அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்கள் உஷார்ப்படுத்தப் பட்டிருந்த நிலையில் மாடிக்கட்டிடத்தோடு பிரதான வீதியிலிருந்து சற்றுத்தள்ளி உள்ளே அமைந்திருந்த சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீது முன்பக்க வாயிலூடாக தாக்குதல் நடத்துவது என்பது விஷப்பரீட்சைதான் ஆனால் உயிரை கடந்த காலத்திற்கு எழுதி வைத்துவிட்டு. புரட்சி வேள்வியில் குதித்திருக்கும் சங்கர், சீலன் ஆகிய போராளி களின் முன்னேஅபாயங்களும் தடைகளும் என்ன செய்து விடமுடியும்? ஜி3 சகிதம் படுத்துக் கிடந்த சங்கர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் ஒரு பகுதிக்கு பொறுப் பாக இருந்து நடந்திய தாக்குதல் இப்பகுதி அரசபடைகளை ஸ்த்தம்பிக்கச் செய்ததும்.

பொன்னாலைக் குண்டுவெடிப்பு நடவடிக்கை யிலும் சங்கர் கடுமையாக உழைத்தான். ஐக்கிய தேசியக் கட்சி (ஜெயவர்த்தனாக் கட்சி) உறுப்பினர் புன்னாலைக்கட்டுவன் தம்பாப் பிள்ளை மீதான இயக்க நடவடிக்கைக்கு சங்கரே பொறுப்புவகித்தான்,

எந்த விதமான வாகனத்தையும் நேர்த்தியாகச் செலுத்தும் ஆற்றலும் சங்கரின் பன்முனைப் பட்ட ஆற்றலுக்கு சான்றாகும். ஒரு கெரில்லாத் தாக்குதலை அடுத்து ஏற்படுகிற பரபரப்பு, எதிரிப்படைகள் அந்த இடத்திற்கு வருமுன்னர் வெளியேற வேண்டிய பதைப்பு என்பவற்றுக்கும் மத்தியில் மிகுந்த வேகத்துடன் அதிக நிதானத்துடனும் வாகனத்தைச் செலுத்துவதில் சங்கர் வல்லவன்.

சக போராளிகளுக்கு ஆயுதங்களைப் பயிற்று விக்கும்போது மிகுந்த கவனம் செலுத்துவான். தெளிவாக விளக்குவான். தனக்கு தெரியாத விஷயங்களை மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டவன். அன்போடும் பணிவோடும் பழகுவதால் சகபோராளிகள் மத்தியில் தனிமதிப்பு வகித்து வந்தான்

தமிழீழ விடுதலையைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவத் தலைமை யிலேதான் வென்றெடுக்கமுடியும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த சங்கர் இயக்கத்தில் தன்னையே கரைத்துக் கொண்டவன். விடுதலைப்போராட்டமே சங்கரின் முழுமூச்சாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கென்றே ஆயுதமேந்திக் களத்திலே குதித்தவன் இந்த வீரன். சமூகவிரோத நடவடிக்கைகளையும் சந்தர்ப்ப வாதிகளையும் அவன் வெறுத்தான் அவன் மனது மிகவும் சுத்தமானது. இத்தகைய இதயசுத்தி நிறைந்த போராளிகளே ஒரு விடுதலை இயக்கத்தின் தூய்மைக்குச் சாட்சியாக நிற்கிறார்கள்.

இயக்கத் தலைவர் பிரபகரனின் அரசியல் வழி காட்டலிலும் இராணுவக் கட்டுக்கோப்பிலும் சங்கர் ஊறி வளர்த்தவன். பிரபாகரனின் அரசியல் தூய்மையில் அவன் எல்லையற்ற மதிப்பு வைத்திருந்தான். மலரப் போகும் தமிழீழம் தன்நலமற்ற - தூய்மை மிக்க விடுதலைப் போராளிகளால்தான் தலைமை யேற்று நடத்தப்படவேண்டும் என்று அவன் எப்போதுமே சொல்லி வந்திருக்கிறான். பதவிப்பித்தர்களும், துரோகிகளும் எங்கள் புனித இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்க முனைந்த போதெல்லாம் அமைதியான இந்தப் போர் மறவன் சினங்கொண்டு எழுந்திருக்கிறான்.

நன்றி ; "தமிழீழம்" சஞ்சிகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கவிஞர் சிங்கார வேலன் - திருச்சி

தமிழ் ஈழம் விடுதலையை எய்திட தமிழ் ஈழ
விடுதலைப் புலிப்படைகள் எழுந்தன. பகைப் படைகள்
பறந்தன.
மறவர் கண்களில் வீரம்!
மாவீரர் உள்ளத்தில் வேகம்!
தரை முட்டி நிற்கும் நீர்ப்பரப்பாய் வீரர்கள்
நின்றனர்! வீரத்தை ஏவினர்!
கடலென எழும்பினர்! களம்பல வென்றனர்
சூரியப் புதல்வர்கள்!
ஓயாத அலைகள்! ஓயாத போர்!
பகலிலும் போர்! இரவிலும் போர்!
தரையிலும் போர்! கடலிலும் போர்!
விண்ணிலும் போர்! தண்ணீரிலும் போர்!
வீட்டிலும் குண்டு விழும்! ரோட்டிலும்
குண்டு விழும்! காடெல்லாம் போர்க்களம்!
நகரெல்லாம் சமர்க்களம்!
எங்குமே சிங்கள இராணுவத்தின் அமர்க்களம்!
ஆனாலும் அஞ்சாமல் சண்டை பிடித்திருக்கிறார்கள்
சூரியப்புதல்வர்கள்!
உணவில்லாமல் நின்று சண்டை பிடித்திருக்கிறார்கள்!
உணவு வந்தும், அதை உண்ண நேரமில்லாமல்
சண்டை பிடித்திருக்கிறார்கள்.
கெட்டுப் போன உணவை குப்பையில்
கொட்டி விட்டும் சண்டை பிடித்திருக்கிறார்கள்.
துக்கங்கள் ஏற்பட்ட போதும்,
துணை நின்றோர் மாண்டபோதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் நினைவு நாள்

## நவம்பர் 27

துவளாது நின்று போராடியிருக்கிறார்கள்.
விழுப்புண் அடைந்த நேரங்களில்
அதற்கு கட்டுப் போட்டுக் கொண்டே
சண்டை பிடித்திருக்கிறார்கள்.
கட்டுப் போடவும் வசதியில்லாத போது
விழுப்புண்களோடு சண்டை பிடித்திருக்கிறார்கள்
அய்ந்தாறு தடவை விழுப்புண் அடைந்தும்
அயராது போராடியிருக்கிறார்கள்.
முதல் நாள் போர்க்களம்!
மறுநாள் மருந்துவமனை இப்படி
மாறி மாறிச் சென்றும் போர் புரிந்துள்ளார்கள்.
பல முறை விழுப்புண்கள் அடைந்தும்.
மரணம் அடையும் தருணம் வரையில்.
கனல் போர் நிகழ்த்தி வெற்றியைத் தந்துள்ளார்கள்
வீர மரணம் அடைந்துள்ளார்கள் அந்தச் சூரியப் புதல்வர்கள்.
நீண்ட நாள் சமரில் இருப்பிடம் நகர்ந்தும்.
நெடும் பயணம் செய்தும் இடைவிடாது போரிட்டும்.
உயிர் ஈகம் செய்து நீள் புகழை அடைந்துள்ளார்கள்
ஆண் போராளிகளும், பெண் போராளிகளும்
காற்று, மழை, வெள்ளம், வறட்சி, பனி, பிணி,
பசி, பட்டினி எனத் துன்பத்தின் பரப்பில் நின்று இருளின்
விளம்பில் தொங்கி போர் புரிந்திருக்கிறார்கள் புலிப்படையினர்!
இவர்கள் சமர்க்களத்தில் வைத்த ஒவ்வொரு காலடிக்கும்.
பெற்ற வெற்றிகளுக்கும் வரலாறு உண்டு!
போர்க் காலங்களில், போர்க் களங்களில்
பதுங்கு குழிகள் வெட்டினர்!
பாதுகாப்பு அரண்கள் கட்டினர்!
அந்தப் பதுங்கு குழிகளில்
குடி நீரும் இல்லாது குடியிருந்து போர் புரிந்தனர்.
உலகப் போர் வரலாற்றில் உன்னத முத்திரை பதித்தனர்
தமிழ் ஈழப்போர் மறவர்கள்.
அந்தச் செயல் வீரர்களை வணங்கும் நாள்
அந்த மாவீரர் நினைவு நாள் வரும் நவம்பர் 27
அந்நாளில் அனைத்துலகத் தமிழர்களும் கூடுவோம் !
தாய்மண் மீட்க தன்னுயிர் ஈந்த மாவீரர்களை
வாழ்த்துவோம்!






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைத் தீ சுமந்து களமாடி...
விதையாகி வீழ்ந்த மாவீரர் நினைவோடு
சுடரேற்றிக் காக்கும் இளம் தளிர்கள்!

www.tamilarangam.net

# வானுலாவும் புலிவீரம் உரக்கச் சொல்லும் மாவீரர்கள்

திலீபன் கலைக்கல்லூரி மாணவன் - இத்தாலி

கார்த்திகை மாதம் 27ஆம் திகதி மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர்நாள் ஆகும். தமிழீழ விடுதலைக்காக தம் உயிர்களை அர்ப்பணித்த போராளி மாமாக்களை நினைவுகூரும் நாளே மாவீரர் நாளாகும்.

இன்றைய நாளானது தமிழீழத்தில் மட்டுமன்றி புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்களால் நினைவு கூரப்பட்டு வருகின்றது. இத் தினத்திலே அனைவரின் கரங்களில் மாவீரர் நினைவுச் சுடர்களையும் மலர்ந்த மலர் களையும் ஏந்திய வண்ணம் மாவீரர் துயிலும் இல்லங் களுக்கு தங்களது வணக்கத்தைத் தெரிவிக்கும் நிகழ்வு அனைவரையும் நெகிழச்செய்து தமது மண்ணின் பெருமையை விளக்கிநிற்கிறது.



நாம் தமிழனாய்ப் பிறந்தும் எமது மண் விடுதலை பெறாத காரணத்தால் அந்திய நிழலில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறோம். இந்த இயந்திர வாழ்வுச்சுமை நீங்க எங்களைப் போன்ற எதிர்காலச் சந்ததியினர் சுதந்திரமாகவும் மானத்துடனும் தமிழீழத்தில் தங்கள் பாதச்சுவடுகளைப் பதிப்பதற்கு தம் இனிய உயிர்களைக் கொடுத்தவர்கள் எம் மாவீரர்கள் இவர்கள் செய்த தவத்தால் நாம் விரைவினில் தமிழீழம் மலர்வதைக் காணப்போகின்றோம்.

நமக்கு மட்டுமா? அன்னை அன்பும், தந்தை பாசமும், உற்றார் உறவும் இல்லையே! இது இவர்கள் இதயத்திலும் இருந்ததே! இருப்பினும் எங்களுடைய நல்வாழ்வை மட்டும் நெஞ்சினில் தாங்கி தமிழீழமே தங்களின் அடிநாதமாய்க்கொண்டு களம் கண்டு சரித்திரமானவர்கள் எம் மாவீரர்கள்.

அன்று ஆமியைக் கண்டு அடங்கி ஒடுங்கிய நாங்கள் இன்று தமிழன் என்றால் புலிகள் என்று சிங்களப்படை நடுங்கிக் கலங்கும் காலத்தைத் தந்தவர்கள் மாவீரர்கள்.

இவ்வரலாற்றின் உந்துவிசையான வீரர்களின் கல்லறைகள் கூட எதிரிக்கு சிம்மசொப்பனமாய் விளங்கு கின்றன. ஏனெனில் அவை ஒவ்வொன்றும் எண்ணற்ற மைந்தர்களை ஈன்று கொண்டி ருக்கும் கருவறைகள் அதனால் தான் தமிழன் கருவறுக்கும் கொடுஞ்செயலை, உலகம் தலைகுனிய வேண்டிய அநாகரிகச் செயலை எம் மண்பிடித்த எல்லா இடங்களிலும் எதிரி செய்தான்.

ஆயினும் மண்மிதித்த எதிரி மடிந்தழியும் நாள் விரைவில் வரும். வானுலாவும் புலிவீரர் உரக்கச் சொல்லும் மாவீரர் மாண்பை. மலரும் தமிழீழம் அவர்கள் ஆத்மா அடங்குமிடமாகும். அது எங்கள் உயிராகி, ஒளியாகி இசையாகி எங்கும் வியாபித்து நிற்கும்.

நாடு வாழ்க! மாவீரர் நாமம் வாழ்க!





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் துயிலும் இல்லங்கள்

ஓடுகின்ற மேகங்களே பாடுகின்ற பறவைகளே
வீசுகின்ற தென்றல் காற்றே நில்லுங்கள் எங்கள்
மாவீரர் துயிலுகின்ற இல்லங்களைப் பாருங்கள்
வந்து பாருங்கள் வணங்கிச் செல்லுங்கள்
(ஓடுகின்ற.....)
மானமே பெரிதென்றோர் மண்டியிடல் தான்
வெறுத்தோர்
தானமாய் உயிர் கொடுத்தோர் தரணியில் பெயர் பொறித்தோர்
வானுக்கு ஒளி கொடுத்தோர் ஈழத்திற்குத் தமைக்
கொடுத்தோர்
மோனமாய் உறங்குகின்றார் ஆறடி நிலத்தில் இங்கே
வந்து பாருங்கள் இதை ஊரெங்கும் கூறுங்கள்
கானம் பாடுங்கள்
(ஓடுகின்ற.....)
தாயகம் காத்து நின்றோர் தமிழுக்கு விழி
கொடுத்தோர்
கரும்புலியாய்ப் போனோர் கடற் புலியாய்
மடிந்தோர்
ஓயாமல் ஓழியாமல் நாட்டிற்கு உழைத்தவர்கள்
ஓய்வாகத் துயிலுகின்றார் ஈழத்தை எண்ணி இங்கே
வந்து பாருங்கள் இதை ஊரெங்கும் கூறுங்கள்
கானம் பாடுங்கள்
(ஓடுகின்ற.....)
தாம் கண்ட கனவுகள் நனவாய் ஆக்கப்படும்
தாம் கொண்ட இலட்சியம் ஒரு நாள் வெல்லப் படும்
தங்களின் வழி தொடர ஐந்து கோடி தமிழருண்டு
என்பதை எண்ணி இங்கே அமைதியாய்த்
தூங்குகின்றார்
வந்து பாருங்கள் இதை ஊரெங்கும் கூறுங்கள்
கானம் பாடுங்கள்
(ஓடுகின்ற.....)

தாயவள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ வரலாறு உள்ளமட்டும் கரும்புலிகள் வாழ்ந்திருப்பர் !



தாயகத்து மண்சிதைக்கும்
தருக்கர் செயல் பொடியாக்க
தாகமுடன் தலைவன் வழி
தாவி வந்த வேங்கைகள்
மேவி நின்ற உறுதியுடன்; உயிர்
காவி வெடியாகினர்!
விண்ணுறங்க; மண்ணுறங்க; எம்
கண்மணிகள் கரும்புலிகளோ
கண்ணுறங்காது இலக்குகளை
குறிபார்த்துப் பகைமுடிக்க
வெறி கொண்ட எதிரிப்படை
கரும்புகைக்குள் கரியாகும்!
காற்றும் கடலும்; வான்பரப்பும்
சூற்றுவனும் மெய்சிலிர்க்க
பெற்றவரும் உற்றவரும்
வென்று நிற்கும் செய்திகேட்டு
தேற்ற வொண்ணா நெஞ்சோடு
தேம்பிநிற்க; பெருந்தலைவன்
பாசமுடன் விழிகசிய
ஏற்றமிகு மாசகம்; உலகெலாம்
போற்றி நிற்க
கரும்புலிகளோ!
காலமெல்லாம்
தமிழீழ வரலாறு உள்ளமட்டும்
வாழ்ந்திடுவர்; அப்போது !
ஊரும் பெயரும்
பொற்கோயில்; பொறித்து நிற்க
பொற்சிலையாய் பூத்திருப்பர்!

இராஜி சண்முகநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்பிக்கையின் காவலர்கள்

## நாதன்

அடுத்த ஆயிரமாம் ஆண்டினுள் நுழைகின்றோம்!

இவ் உலகளாவிய உணர்வினுள் நூற்றாண்டு - பத்தாண்டு போன்ற உணர்வுகள் அடிப்பட்டு ஆயிரமாம் ஆண்டு பற்றிய உற்சாகம் எழுந்து நிற்கின்றது. நாம் இவ் ஆண்டுகள் பற்றிய மேற்கத்தைய கணிப்பினுள் நம்பிக்கையுடன் அந்த 2000 ஆண்டிற்காக காத்துள்ளோம்!

இந்த நம்பிக்கை எம்மை சூழ்ந்து, எழுந்து நிற்கும் அடக்குமுறைகள் அழிந்து புதியதொரு வாழ்வு உருவாகி வருகின்றது என்ற எமது எண்ணத்தில் உருவாகியது. நாம் விடுதலைக்காக போராடும் மக்கள் திரள். சிங்கள பேரினவாதத்தின் கொடூர ஆக்கிரமிப்பை விரட்டி அங்கு எமக்கான அரசியல் அமைவை நிறுவும் வரலாற்றுச் சக்கரத்தை நாம் சுற்றுகின்றோம். இவ் இயக்கப்போக்கில் பல சோதனைகளை கண்டுவிட்டோம். பல சாதனைகளை புரிந்துவிட்டோம். இக் காலஓட்டத்தின் ஊடு நாம் மெருகேற்றப் பட்டோம். உரிமை பற்றிய உலகளாவிய கருத்துக்களை கற்றோம். சலுகை பற்றி எழுந்த பழைய கோட்பாடுகளை நிராகரித்து உரிமையை அறிந்த மனிதர்கள் நாமானோம்.

இன்று எமது விடுதலை இராணுவம் பலமானதாக எழுச்சி கொண்டு நிற்கின்றது. எமது தேசிய எழுச்சியின் ஒரு பாகமாக மக்கள் தற்காப்பு போர்க்கலையை கற்று தமது அரசியல் - பண்பாட்டு எழுச்சியை பாதுகாக்க திடசங்கற்பம் பூணும் அற்புதத்தைப் பார்க்கின்றோம்.

இத்தனை மாற்றங்களின் பின்னணியில் தமிழர்களின் பலமாகவும் ஆதாரமாகவும் விளங்கும் சரித்திர விசை இந்த மாற்றத்திற்காக சாவை ஏற்றுக்கொண்ட எம் மாவீரர்களாவர்.

மாவீரர்களை சரித்திரத்தை இயங்கும் சக்தி என வர்ணிப்பது வெறுமனே தமிழர்களுக்குள் அடங்கி நிற்கும் மரமல்ல. இது உலகளாவிய சிந்தனை. தமது சாவின் மூலம் சரித்திரத்தை எழுதிச் சென்ற மானுடர்களாலேயே உலகின் நியாய இயக்கங்கள் இடம்பெற்றன. புரட்சிகளும் மாற்றங்களும் மக்களை பற்றிஇழுத்து சரித்திரத்தின் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும்போது அதற்காக தம்மை அர்ப்பணித்த மானுடர்களே மாற்றத்தின் ஆத்மார்த்தமான சக்தியாக இயங்கி புனிதத்தை பாதுகாத்தனர். பழைய பண்பாட்டை உடைத்து புதியத்திற்கான வித்தை விதைத்தவர்கள் இவர்கள். இன்று எமது எழுச்சியின் பின்னால் இப் புதிய மரபு ஆதார சக்தியாய் திகழ்கின்றது. நாம் மாவீரர்களை மதித்து தொழும் வரலாற்றைப் பெற்றுள்ளோம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றும் - இக்கணத்தில் ஒரு போராளி எமது மண்ணின் ஏதோ ஒரு மூலையில் எமக்காக வீழ்கின்றான். அவன் எமது சரித்திர ஏடுகளின் நாயகனாகி வழிகாட்டி யாகின்றான். இங்கே சாவு வெறும் பௌதீக சடங்காக மதிக்கப்படவில்லை வெறும் உயிரியல் நிகழ்வாக கருதப்படவில்லை மாறாக ஒரு சரித்திர நிகழ்வாக மதிக்கப் படுகின்றது .

2000ஆம் ஆண்டில் நுழையும் நாம் இந்த புனிதமான பாரம்பரியத்தின் உயரிய இலக்கை எட்டும் வெளிச்சத்தினுள் நிற்கிறோம்.

தமிழீழம் உருவாகி வருவதை உணரும் காலத்தில்- பிரபாகரன் யுகத்தில்- நின்றவாறு 2000 ஆண்டின் பிறப்பைப் பார்க்கிறோம்.

உலகநாடுகள் தத்தமது தேசங்களில் அந்த மில்லனியத்தின் பிறப்பை கொண்டாடு வதற்காக மில்லியன்கள் செலவிட்டு கட்டடங்களையும், மைதானங்களையும், பிற காட்சிப் பொருட்களையும் உருவாக்கு கையில் நாம் எமக்கு சொந்தமான ஒரு நாட்டை உருவாக்குகின்றோம். இந்த இலட்சியத்தின் காவலர்களாக மாவீரர் திகழ்கின்றனர். எமது பண்பாடும் சிந்தனையும் இவ் எழுச்சியின் திசையிலேயே புதியதாய் பிறந்து - புதியதாய் எழுகின்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாடி நினைத்திடுவோம்!



பாடி நினைத்திடுவோம் எங்கள் மாவீரரை
பாடி நினைத்திடுவோம்
பாரினில் அவர் மேன்மை போற்றி
பாடி நினைத்திடுவோம்!

வாழ வழி இருந்தும்; வெளிநாடு செல்ல
வாய்ப்பிருந்தும், தாயின் விலங்கொடிக்க
தம்மைத் தந்து சென்றவரை
பாடி நினைந்திடுவோம்!

பள்ளி அருகிருந்தும் படிக்குமாற்றல் மிக இருந்தும்
பிள்ளைப் பருவத்திலே தரணியில் தமிழினம் தழைக்க
தம்மைத் தந்து சென்றவரை
பாடி நினைந்திடுவோம்!

இரவும் பகலும் விழிப்பாக இருந்தும்
மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
தமிழீழ விடுதலைக்கு தம்மைத் தந்து சென்றவரை
பாடி நினைந்திடுவோம்.

**மாவீரர் லெப். கேணல் பாவரசன் (பைப்)**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வென்றவர், நெஞ்சில் நின்றவர்

வெற்றிக் கும்முயிர் சமர்ப்பணம் - தலை
சாய்க்கிறோம் உங்களுக் கோர்கணம்.
ஆற்றலர் துயிலிடம் எம்மனம் - தொழு
தேற்றுறோம் உங்களை அனுதினம்.
பற்றுத லோடிங்கு வாழுவீர் - தமிழ்
நெஞ்செலாம் இடம்பிடித் தாளுவீர்.

www.tamilarangam.net



# தொடும் தூரத்தில் விடுதலை...

கலறையின் வடிவத்தில்
வீரத்தினை புதைத்துநிற்கும்
ஈழத்தின் விளைநிலங்களே!
நான் தொழுகிறேன்.

எங்கெங்கெல்லாம்
உங்கள் காலடித்தடங்கள்
தங்கியிருக்கிறதோ....
அங்கெல்லாம் நான் நின்று
வணங்குகிறேன்.

ம.ராஜூ புதுச்சேரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த இடங்கள்-
மரணத்தையே தின்றுவிடும்
மகத்துவம் கொண்டது.
தமிழீழ தெருக்களில்....
தணல் தெறிக்கும் காடுகளில்....
விடுதலை வழியும் விழிகளோடு
இரவின் கண்களாய்
விழித்தவர்களே!

யார் சொன்னது?
இமைகள் நனைந்தபடி
உங்கள் இரங்கற்பா
பாடி முடிந்ததென்று.

எரிமலையை கல்லறைக்குள்
புதைக்கமுடியுமா?

சட்டங்களுக்காக காத்திருந்தால்....
கறுப்பு இனத்தின்மீது
நெருப்பு விழுந்திருக்கும் என்று
மாமனிதர் நெல்சன் மண்டேலாவுக்கு
தெரியும்.

சட்டங்களுக்காக காத்திருந்தால்....
இந்திய மக்கள் எல்லாம்
அடிமைச் சிலுவைகளில்
இன்றும் அறையப்பட்டிருக்கும்
என்று விடுதைலச் சூரியன்
சுபாஷ் சந்திரபோசுக்கு தெரியும்.

இப்படியே காத்திருந்தால்....
ஈழத்தின் வெள்ளை உயிரெல்லாம்
கொள்ளை போயிருக்கும் என்று
உங்கள் துப்பாக்கி முனைகளுக்குத்
துலங்கும்.

போர்கள் என்பவை
கண்ணீரில் பூப்பவை.
அழுந்த அழுந்த புதைத்தால்-
எந்தச் சிலுவையும்
எழுந்து வரும்.

இது-
இருள்படிந்த எம் தேசத்திற்கு....
வரும் சுடருக்காக வழி செய்ய
சூரிய முகத்தை
திருப்பிவிடுகிற முயற்சி.

இன்று-
இந்த நெருப்பு மழையில்
நீங்கள் நனைந்துவிடலாம்
ஆனால்-
நாளை வேறொரு கருப்பையில்
மீண்டும் விளைந்து வருவீர்கள்.
புலியின் வேகத்தில்
தேசம் புலர்ந்து
வரும் வரை.
தொடும் தூரத்தில்
விடுதைல
முளைத்து வரும் வரை.



# தியாகப் பூவே

*சில்லிட்டு சிரித்த புலியே*
*தாயகத்தின் ஆணிவேராய்*
*நிமிந்திட்ட பூவே*

*புயலாகிப் புறப்பட்ட*
*பூகம்பத்தின் வீரமே*
*மெழுகாகி உருகிட்ட*
*வீரத்தின் அனலே*

*நெஞ்சத்தின் உயிராய்*
*நிறைந்திட்ட*
*உன்னத மூச்சே*

*இளந் தளிர்களின்*
*உள்ளங்களில்*
*பூவாய் மலர்ந்திட்ட*
*தியாகத்தின் வீரமே*

*உன் நினைவு அழியாது*
*உன் கனவு வீணாகாது.*

**செல்வி. இனியவள்**
**செஞ்சோலை குழு - 6**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிக்கும் பூவாசம்

க. வீரா

அனல் தெறிக்கும் விழியோடு
அண்ணன் அவன் படைநகரும்
அதிரடிகள் பல நடக்கும்
ஆயுதங்கள் பல கிடைக்கும்
விடிவு பெறும் நிலங்களிலே
கொடி உயரும் கொண்டாட்டம்
தடைகள் பல தகர்க்க
தாண்டிப் பகை ஓடும்
என்றும் மனம் துவண்டிடாத
கரும்புலிகள் தியாகத்தால்

விடியும் எம் தேசம்
வெளிக்கும் பூ வாசம்
எந்திரமா நாங்கள் என்ன
எரிதணல்கள் அன்றோ
தங்கிடாது பகையின் கால்கள்
மங்கிடாது மாவீரர் தியாகம்
மலர்ந்துவிடும் மலர்ந்துவிடும்
மானமுடன் தமிழீழம்
புலர்ந்து விடும் புதுப்பொழுதாய்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழிக்குள்ளே சிரிக்கின்றோர்

புதுவை இரத்தினதுரை

அலைகொண்டு திமிர்கின்ற கடலென்னவருகின்ற
அதிகாரப் பகை வென்றவர்.
அழிவொன்றே தருகின்ற படைமீது இடிகொண்டு
அதிர்கின்ற வலு கொண்டவர்.
முலையுண்ட மடிமீதில் எவர்வந்தும் குடிகொள்ள
முடியாது எனச் சொன்னவர்.
முதிராத இளவாலை வயதென்ற நிலைமீறி
முழுவோடு களம் கண்டவர்.
உலைகின்ற விதிநாளை இலையென்று மகிழ்வோடு
உறவுக்குப் பதில் தந்தவர்.
உயிரென்ன உயிரென்று உரிமைக்கு விலையாக
உயிர்பூவைப் பிடி என்றவர்.
சிலையாகி வாழ்கின்ற திருவாசற் படியேறிச்
சிரம்தாழ்த்தி விளக்கேற்றுவோம்.
சினமூறும் மனதோடு குழிக்குள்ளே விழிமூடிச்
சிரிக்கின்றோர் புகழ் பாடுவோம்.



# வரலாறு உம் பெயரை உச்சரிக்கும்

மயிலை தர்மராஜா

நாளை எமது விடியலை
எழுதும் தூரிகைகள்
உம்முள்ளத் துணர்வுகளை
உலகெங்குமெடுத்துரைக்கும்.
சூலறைசுமந்திருந்த
அக்கினிக்குஞ்சுகளாய்
உம்மண்ணை மடி மீது கால்பதித்த
கணப்பொழுதுகள்
நேசித்த தாய் நிலத்துக்காக
வீரனாய்க் கிளர்ந்தெழுந்து.
மரணத்தை உவிந்திழுத்து
உயிரையுதறித்தள்ளியிறுதியாய்..
தீய்ந்து போன மணித்துளிகள்
விடுதலை வரித்த அடையாளங்களாய்...
காலச்சுவடுகளில் செதுக்கப்படும்
வெங்களத்தில்...
பகை வீடுகளெரித்தழித்தும்.
பசையள்ளி விழுங்கியநிலம் மீட்டும்.
இன்னுமின்னும்
நாமறியாமலுமெமக்காக.
நீர் செய்த சாதனைகளால்......
வரிப்புலிப்படையணி
வீறுகொள்ளும்; வாகைசூடும்
வரலாறு உம்பெயரை உச்சரிக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் நினைவுக்குறிப்பு

## 27.11.1982 தொடக்கம் 31.12.1998 வரை வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை



### சில முகாம் தகர்ப்புக்கள், இராணுவ நடவடிக்கைகளில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| ஆ.க.வெ.சமர் | - 604 |
| மணலாறு | - 233 |
| ஒப்பிரேசன் தவளை | - 460 |
| கொக்குத்தொடுவாய் | - 175 |
| இடிமுழக்கம் | - 181 |
| சூரியக்கதிர் | - 438 |
| ஓயாத அலைகள் -1 | - 315 |
| சத்ஜெய - 02 | - 100 |
| சத்ஜெய - 03 | - 133 |
| பரந்தன் - ஆனையிறவு | - 193 |
| கிளிநொச்சி,பரந்தன் படைத்தளம் மீதான ஊடுருவித் தாக்குதல் | - 300 |
| ஓயாத அலைகள் - 2 | - 405 |
| ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையும் அதன்மீதான எதிர்த்தக்குதல்களும் | - 2146 |

### 31.12.1998 வரை தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் வீரச்சாவடைந்த கரும்புலிவீரர்களின் எண்ணிக்கை

**தரைக்கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண்தரைக்கரும்புலிகள் | - 45 |
| பெண்தரைக்கரும்புலிகள் | - 09 |
| மொத்தம் | - 54 |

**கடற்கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண்கடற்கரும்புலிகள் | - 64 |
| ண்கடற்கரும்புலிகள் | - 28 |
| மொத்தம் | - 92 |

**கரும்புலிகள்**

| | |
|---|---|
| ஆண்கரும்புலிகள் | - 109 |
| பெண்கரும்புலிகள் | - 37 |
| மொத்தம் | - 146 |

### ஆண்டுவாரியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 82ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 01 |
| 83ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 05 |
| 84ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 36 |
| 85ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 123 |
| 86ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 258 |
| 87ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 451 |
| 88ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 363 |
| 89ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 372 |
| 90ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 960 |
| 91ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1613 |
| 92ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 788 |
| 93ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 925 |
| 94ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 374 |
| 95ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1502 |
| 96ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1374 |
| 97ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 2099 |
| 98ம் ஆண்டு வீரச்சாவடைந்தோர் | - 1791 |
| ஏனையோர் | - 266 |
| தனிக்குழு | - 10 |

### மாவீரர்களின் மொத்த எண்ணிக்கை

| | |
|---|---|
| ஆண் மாவீரர்கள் | - 11,071 |
| பெண் மாவீரர்கள் | - 2,240 |
| மொத்தம் | -13,311 |





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வெளியீடு : அனைத்துலகச் செயலகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்